**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, SINGAMPUNARI**

**C.C. No. 61/2021 PW . 1**

**பெயர்** : லெட்சுமி **தந்தை/கணவர் பெயர்:**

**ஊர்** : **தாலுகா:**

**வயது** : **தொழில்:**

**ஜாதி** : **சமயம்:**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 22.10.2024

---

**(1 முதல் 3 எதிரிகள் ஆஜரில்லை. 1 முதல் 3 எதிரிகள் சார்பில் கு.வி.மு.ச. பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல்செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).**

**22.10.2024 முதல் விசாரணை:**

1. நான் நாட்டார் மங்கலம் கிராமத்தில் குடியிருக்கிறேன். கூலி வேலை செய்கிறேன். எதிரிகளை தெரியும். சுமார் 3 வருடத்திற்கு முன்பாக தேதி மாதம் ஞாபகமில்லை. எனது மகள் வீடு பிரான் மலைக்கு சென்றிருந்தேன். எனது சம்பந்தகாரர்களுக்கும் எதிரிகளுக்கும் பிரச்சனை இருந்தது. எனது மகள் 8 மாத கர்ப்பிணியாக இருந்தார். எனது மகளுக்கு குழந்தை பிறக்கக்கூடாது செத்துவிடவேண்டும் என்று எதிரிகள் பேசினார்கள். அதை நான் தட்டிகேட்டதற்கு செல்லம்மாள் என்னை அரிவாள்மனையால் எனது இடது கை மணிக்கட்டில் வெட்டிவிட்டார். எனது சின்ன மருமகன் சண்முகம் மற்றும் அங்கிருந்தவர்கள் விலக்கிவிட்டு என்னை சிங்கம்புணரி அரசு மருத்துவமனைக்கு அழைத்து வந்தார்கள். மறுநாள் போலீசார் என்னை விசாரித்தார்கள். நான் நடந்த விவரங்களை சொன்னேன். என்னிடம் காட்டப்படும் புகார்வாக்குமூலத்தில் உள்ள கைரேகை என்னுடையது தான். **(அந்த புகார் வாக்குமூலம் அ.த.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:**

2. எதிரிகள் வழக்கறிஞர் ஆஜர். கு.வி. இல்லையென தெரிவிக்கப்பட்டதால் கு.வி. முடிக்கப்பட்டது.

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE,**

**SINGAMPUNARI**

**C.C. No. 61/2021 PW . 2**

**பெயர் : பாப்பா** **தந்தை/கணவர் பெயர்:**

**ஊர் :** **தாலுகா:**

**வயது :** **தொழில்:**

**ஜாதி :** **சமயம்:**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 22.10.2024

---

**(1 முதல் 3 எதிரிகள் ஆஜரில்லை. 1 முதல் 3 எதிரிகள் சார்பில் கு.வி.மு.ச. பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல்செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).**

**<u>22.10.2024 முதல் விசாரணை:</u>**

1. நான் நாட்டார் மங்கலம் கிராமத்தில் குடியிருக்கிறேன். கூலி வேலை செய்கிறேன். அ.சா.1 எனது சம்பந்தி ஆவார். எதிரிகளை தெரியும். சுமார் 3 வருடத்திற்கு முன்பாக தேதி மாதம் ஞாபகமில்லை. எங்களுக்கும் எதிரிகளுக்கும் முன் விரோதத்தினால் வந்த சண்டையில் எனது மருமகளை எதிரிகள் திட்டினார்கள். குழந்தை பிறக்கக்கூடாது செத்துவிடவேண்டும் என்று சொன்னார்கள். அதற்கு எனது சம்பந்தியான அ.சா.1 எனது மகளை பேசக்கூடாது என்று சொன்னார். அதனால் செல்லம்மாள் அ.சா.1யை அரிவாள்மனையால் இடது கை மணிக்கட்டில் வெட்டிவிட்டார். மற்ற எதிரிகளும் அவரை அடித்து விட்டார்கள். மூர்த்தி மற்றும் அங்கிருந்தவர்கள் விலக்கிவிட்டு அ.சா.1யை சிங்கம்புணரி அரசு மருத்துவமனைக்கு அழைத்து வந்தார்கள். மறுநாள் என்னை வீட்டில் வைத்து போலீசார் விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

2. எதிரிகள் வழக்கறிஞர் ஆஜர். கு.வி. இல்லையென தெரிவிக்கப்பட்டதால் கு.வி. முடிக்கப்பட்டது.

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE,**

**SINGAMPUNARI**

**C.C. No. 61/2021 PW . 3**

**பெயர் : ராஜேஸ்** **தந்தை/கணவர் பெயர்: சண்முகம்**

**ஊர் :** **தாலுகா:**

**வயது :** **தொழில்:**

**ஜாதி :** **சமயம்:**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 22.10.2024

---

**(1 முதல் 3 எதிரிகள் ஆஜரில்லை. 1 முதல் 3 எதிரிகள் சார்பில் கு.வி.மு.ச. பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல்செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).**

**<u>22.10.2024 முதல் விசாரணை:</u>**

1. நான் தற்போது கோயம்புத்துாரில் வசித்து வருகிறேன். சம்பவ நடந்த சமயத்தில் பிரான்மலையில் வசித்து வந்தேன். மெடிக்கல் சம்பந்தமாக வேலை செய்கிறேன். அ.சா.1 எனது அத்தை ஆவார். எதிரிகளை தெரியும். 13.03.2021ம் தேதியன்று மாலை 5-5.30 மணியளவில் எனது அண்ணி கௌசல்யா 8 மாத கா்ப்பிணியாக இருந்தார். அ.சா.1 எனது அண்ணியை பார்க்க வந்தார். எதிரிகள் எப்போதும் போல் திட்டும்போது எனது அண்ணியை கேவலமாக திட்டினார்கள். உனக்கு குழந்தை பிறக்காது. நீயும் பிள்ளையும் செத்துவிடனும் உங்களுக்கு வாரிசு இருக்காது என்று பேசினார்கள். இதனால் பாதிக்கப்பட்ட அ.சா.1 எதிரிகளிடம் தட்டி கேட்டதற்கு எங்களிடத்திற்கு வந்து எங்களை எப்படி பேசப் போச்சு என்று சொல்லி அ.சா.1யை எதிரிகள் அடிக்க ஆரம்பித்தார்கள். நாங்கள் நின்று வேடிக்கை பார்த்தோம். அப்போது எதிரி செல்லம்மாள் அரிவாள் மனையை எடுத்து இடது கை மணிக்கட்டில் வெட்டிவிட்டார். செல்லம்மாள், வெள்ளைத்தாய் அடித்துக்கொண்டிருக்கும் போது மூர்த்தி தகாத வார்த்தைகளால் பேசி பெரிய சண்டை வரவும் நான் எனது அப்பா சண்முகம் எனது அண்ணன் பார்க்கியம், பெரியம்மா பாப்பா சண்டையை விலக்கினோம். எங்களை அந்த சண்டையில் சேர்த்தார்கள். நாங்கள் சண்டையை விலக்கி நானும், எனது அண்ணனும் அ.சா.1யை சிங்கம்புணரி அரசு மருத்துவமனைக்கு அழைத்து வந்தார்கள். மறுநாள் என்னை மருத்துவமனையில் வைத்து போலீசார் விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

2. எதிரிகள் வழக்கறிஞர் ஆஜர். கு.வி. இல்லையென தெரிவிக்கப்பட்டதால் கு.வி. முடிக்கப்பட்டது.

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, SINGAMPUNARI**

**C.C. No. 61/2021 PW . 4**

**பெயர் : சண்முகம்** **தந்தை/கணவர் பெயர்:**

**ஊர் :** **தாலுகா:**

**வயது :** **தொழில்:**

**ஜாதி :** **சமயம்:**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 22.10.2024

---

**(1 முதல் 3 எதிரிகள் ஆஜரில்லை. 1 முதல் 3 எதிரிகள் சார்பில் கு.வி.மு.ச. பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல்செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).**

**22.10.2024 முதல் விசாரணை:**

1. நான் பிரான்மலையில் வசித்து வருகிறேன். கூலி வேலை செய்கிறேன். அ.சா.1 எனது சம்பந்தக்காரர் ஆவார். எதிரிகளை தெரியும். சுமார் 3 வருடத்திற்கு முன்பாக ஒரு நாள் எனது அண்ணியும் அ.சா.1ம் எதிரிகளுடன் வாய்தகராறு இருந்தது. செல்லம்மாள் அ.சா.1யை அரிவாளால் வெட்டினாரா அல்லது அரிவாள் மனையால் வெட்டினாரா என்று தெரியாது. அ.சா.1க்கு இரத்தக்காயம் ஏற்பட்ட போது நான் சென்றேன். நானும், எனது மகனும் சண்டை போடாதீர்கள் என்று சொல்லி விலக்கி விட்டோம். என்னையும் அடிப்பேன் என்று சொன்னததால் நாங்கள் அமைதியாக இருந்தோம். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:**

2. எதிரிகள் வழக்கறிஞர் ஆஜர். கு.வி. இல்லையென தெரிவிக்கப்பட்டதால் கு.வி. முடிக்கப்பட்டது.